பேச்சுப் போட்டி – உயர்பிரிவு

தமிழர் புலப்பெயர்வு

ஓரினம் மரபு வழியாகத் தான் வாழ்ந்து வந்த நாட்டை விட்டு வேறோர் நாட்டுக்குக் குடிபெயர்வது புலப்பெயர்வு எனப்படும்.புலப்பெயர்வானது போர், நோய், பேரிடர், அரசியல், பொருளாதாரம் முதலிய ஏதுக்களால் நிகழலாம். தமிழினம் இதுவரை ஐந்து பெரிய புலப் பெயர்வுகளைச் சந்தித்து உள்ளது. குமரிக்கண்டப் புலப்பெயர்வு, சிந்துவெளிக் காலப் புலப்பெயர்வு, சோழர் காலப் புலப்பெயர்வு, ஐரோப்பியர் காலப் புலப்பெயர்வு, இக்காலப் புலப்பெயர்வு என்பன அவையாகும்.

இன்று இந்து மாகடலாக உள்ள பகுதி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலப்பரப்பாக இருந்தது. அதைக் குமரிக் கண்டம் என்பர். குமரிக்கண்டமானது இன்றைய கன்னியாக்குமரிக்குத் தெற்கே நெடுந்தொலைவுக்கு பரந்திருந்தது. குமரிக்கண்டத்தின் மேல் கோடியிலே ஒரு பன்மலை அடுக்கத்துப் பெருந்தொடர் இருந்து. அது குமரிமலை என்று அழைக்கப்பட்டது. அதன் தென்கரையிலே ப.ஃறுளி என்னும் பேராறும் வடகோடியில் குமரி என்னும் பேராறும் தோன்றிக் கிழக்கு முகமாகப் பாய்ந்தோடின என்று தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகின்றார்.

ப.ஃறுளி ஆற்றுக்கும் குமரி ஆற்றுக்கும் இடையே நாற்பத்தொன்பது நாடுகள் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. அவை கடலில் மூழ்கிவிட்டன. ப.ஃறுளியாற்றோடு பன்மலைத் தொடர்களைக் கொண்ட குமரி மலையையும் கொடிய கடலானது விழுங்கிக் கொள்ளப் பாண்டிய மன்னன், வடக்கே இருந்த இமயமும் கங்கை பாய்ந்த வடபுலமும் நோக்கிப் புலம்பெயர்ந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இது தமிழரது முதலாவது புலப்பெயர்வு ஆகும்.

முன்னாளில் நாவலந்தீவு என அழைக்கப்பெற்ற இந்தியா முழுவதும் கி.மு.1500 ஆம் ஆண்டுவரைத் தமிழருக்கே சொந்தமாகு இருந்தது. இந்தியாவுக்கும் பாகித்தானுக்கும் இடையே சிந்து நதி பாய்கின்றது. அந்த ஆற்றின் படுக்கையில் மொகஞ்தாரோ, அரப்பா ஆகிய நகர்கள் இருந்தன. அந்த நகர்களில் தமிழர் அமைதியான வாழ்க்கை நடத்தி வந்தனர். அந்த நகர்கள் இன்று நிலத்துட் புதையுண்டு கிடக்கின்றன.

அந்தநாளில் இன்றைய ஈரான், ஈராக் நாடுகள் மெசப்பத்தோமியா என அழைக்கப்பெற்றன. அந்தப் பகுதிகளில் வாழ்ந்த நாடோடி மக்கள் கூட்டம் கி.மு.1500 ஆம் ஆண்டளவில்,ஆப்கானித்து கைபர் கணவாய் ஊடாக நாவலந் தீவினுள் நுழைந்தது. மந்தை மேய்ப்போரான இவர்கள் புது வள நிலங்களைத் தேடி வந்தனர். அவ்வாறு நுழைந்தோரை ஆரியர் என்று அழைப்பர். ஆரியர் தொடர்ந்து இந்தியாவினுள் நுழைந்து, வட புலத்தைத் தம் வயப்படுத்தினர்.

இந்த ஆரியரது மேலாண்மையின்கீழ் வாழ விரும்பாத தமிழர் சிந்து வெளிப் பகுதியை விட்டுத் தென் நிலத்திற்குப் புலம்பெயர்ந்தனர். இதனால், இந்தியா முழுவதும் விரிந்திருந்த தமிழகம் ‘வடவேங்கடம், தென்குமரி’ இடைப் பட்ட தமிழகம் ஆயிற்று. இது தமிழரது இரண்டாவது புலப்பெயர்வு ஆகும்.

இதன்பின் பிற்காலச் சோழர் காலத்தில்(கி.பி. 1000-1400) ஆள்புல விரிவாக்கப் புலப்பெயர்வு ஒன்று இடம்பெற்றது. சோழப் பேரரசன் இராசஇராசனும் அவன் மகன் இராசேந்திரனும், பாண்டிய நாடு, ஈழ நாடு, வட இந்திய நாடுகள் மற்றும் தென் கிழக்காசிய நாடுகளையும் கைப்பற்றி ஆண்டனர். அவ்வமயம், ஆட்சியளார், படைவீரர், வணிகர், அறிவுரையாளர் என்ற முறையில் அந்த நாடுகளுக்குத் தமிழர் புலம் பெயர்ந்தனர்.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் சோழர் ஆட்சி அங்கு அற்றுப் போயிற்று. ஆயினும், புலம்பெயர்ந்தோர் அந்நாடுகளில் நிலைத்துவிட்டனர். தமிழ் பண்பாட்டுக் கூறுகள் அங்கே வேரூன்றிவிட்டன. தமிழர் கலை, பண்பாடுகள் இன்றும் அந்நாடுகளில் நிலவி

வருகின்றன. தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் திருவாசகம், திருப்பாவை ஓதுகின்றனர். தமிழ் ஆண்டுப் பிறப்பான பொங்கல் நாளையே புத்தாண்டாகக் கொள்கின்றனர். சுமத்திராவில் உள்ள பழங்குடியினர் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு புலம்பெயர்ந்தோரின் வழித் தோன்றல்கள் தாம் தமிழர் என்பதை உணராத வகையில் இன்று வாழ்கின்றனர்.

ஐரோப்பியர் தமிழகத்தையும் ஈழத்தையும் ஆண்ட காலத்தில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் ஒரு புலப்பெயர்வு நிகழ்ந்தது இந்தக் காலத்தில் தமிழர் பெருந்தோட்டக் கூலிகளாகப் புலம்பெயர்ந்து சென்றனர். அவ்வாறு புலம்பெயர்ந்தோர், ஆசியா, ஆபிரிக்கா, நடுஅமெரிக்க நாடுகளில் அடிமைகள் போல் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கைத்தேயிலையும் மலேசிய இறப்பரும் பர்மா அரிசியும் தமிழரது குருதியில் விளைந்தவை எனக்கூறுவர்.

சிங்கப்பூர் மலேசியப் பெருந்தோட்டத்தில் கூலித் தொழிலாளராகத் தமிழகத் தமிழரும் மேலாண்மைப் பணிகளுக்கென ஈழத்தமிழரும் குடிபெயர்ந்து சென்றனர். இன்று அவர்கள் அந்தந்த நாடுகளில் வாழ்கின்றனர். இந்த நாடுகளில் தமிழ்ப் பள்ளிகள் பணி ஆற்றுகின்றன. பல்கலைக் கழகங்களிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. இன்று தமிழகம் மற்றும் ஈழத்துக்கு வெளியே அதிகளவில் தமிழர் வாழும் நாடாக மலேசியா விளங்குகிறது. இங்கு ஏறத்தாழ இருபது இலக்கம் தமிழர் வாழ்கின்றனர். சிங்கப்பூரில் தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது.

கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்காக ரியூனியன், தென்னாபிரிக்கா, மொறிசியசு, பிசி தீவுகள், ரினடாட், கயானா முதலிய நாடுகளுக்குத் தமிழர் புலம் பெயர்ந்தனர். அங்கு சென்ற தமிழர் இன்று மொழி இழந்தவராய் வாழ்கின்றனர்.

பண்ணைகளிலும் தொழிற்கூடங்களிலும் பணி புரிவதற்காகத் தமிழர் பர்மா நாட்டுக்குப் புலம்பெயர்ந்தனர். இன்று ஏறத்தாழ மூன்று இலக்கம் தமிழர் இந்நாட்டில் வாழ்கின்றனர், அவர்களில் பெரும்பாலானோர் உழவுத் தொழிலிலும் உணவு வணிகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

1948 ஆம் ஆண்டில் இலங்கைத் தீவு ஆங்கிலேயர்ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. அன்று முதல், அத்தீவில் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் இனமொழி ஒதுக்கல்களை மேற்கொண்டன. அதன் விளைவாக நாட்டில் அமைதி குலைந்தது, போர்ச்சூழல் உருவானது. அதன்விளைவாக ஏறத்தாழ பத்து இலக்கம் ஈழத்தமிழர் நாட்டை விட்டு வெளியேறினர்.

இவர்கள் அமெரிக்க, ஐரோப்பிய, அவுத்திரேலியப் பெருநிலங்களில் உள்ள நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். அவர்களது பிள்ளைகள் அந்நாடுகளில் கல்வியில் சிறந்து விளங்கி வருகின்றனர். அந்நாடுகளில் கனடாவிலேயே பெருமளவு தமிழர் குடியேறியுள்ளனர்.